# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre



Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au


## ஆண்டு 6

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு கூடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம் .......

இங்கு உங்கள்முன் பேச எடுத்துக்கொண்ட தலைப்பு

# நன்றிக் கடன்

ஒருவர் நமக்குச் செய்த எந்தச் சிறிய உதவியானாலும், அவருக்கு அல்லது மற்றவருக்குத் திருப்பிச் செய்யும் மனப்பூர்வமான உதவி நன்றிக்கடன் ஆகம்.

திருவள்ளுவர் தமது குறளில் .....

“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் – உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. “ என்றும்

“நன்றி மறப்பது நன்றன்று – நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.” என்றும் “நன்றிக்கடன்” பற்றி மிகவும் அழகாகக் கூறுகின்றார்.

பெற்றோர்களே நம்மை இந்த உலகிற்கு அறிமுகப் படுத்தியவர்கள்.
“அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்” அவர்களை இறுதிக் காலத்தில் பராமரிக்க வேண்டியது நமது எல்லோரதும் கட்டாயமான கடமையுமாகும்.

எமது பெற்றோர் நம்மைப் பெற்று வளர்த்து, நோய்-பிணி அண்டாது, நாளும் பொழுதும் கண்ணை இமை காப்பதுபோல் காத்தவர்கள். இன்றுவரை நம்மிடம் எதையும் எதிரப்பார்க்காது உணவூட்டி, கல்வியூட்டி, ஒழுக்கத்துடன் நன்மக்களாக வாழ்வூட்டித் தேவையறிந்து உதவி செய்து வருகின்றனர்.

பாரதப் போரிலே நன்றிக் கடனுக்காக சகோதர்களுடன் சண்டையிட்டு தனது உயிரையே விட்டவன் கர்ணன்.

நமது வாழ்க்கைக் காலத்தில் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பலர் உதவியுள்ளனர். அவர்களுக்காக நன்றியுடன் இருப்போம்

எனவே நன்றியாக வாழ்வோம், நம்மால் இயன்றதை மற்றவர்களுக்குப் பகிர்வதுடன் இல்லையென்றாது இருப்பதை கொடுத்து அன்புடன் வாழ்வோம் எனக் கூறி எனது உரையினை நிறைவு செய்கின்றேன்.



நன்றி
வணக்கம்.

திரு. எல்விஸ் எமிலியானுஸ்